# 10.63 லட்சம் பேர் மெட்ரோவில் பயணம்

**சென்னை, நவ. 2–** மெட்ரோ ரயிலில், 10.63 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

கொரோனா ஊரடங்கு தளர்வுக்குபின், சென்னையில், செப்., 7ம் தேதியில் இருந்து, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயிலில், செப்., 7 முதல், 30ம் தேதி வரை, 3.60 லட்சம் பேர், அக்., 1 முதல், 31ம் தேதி வரை, 7.03 லட்சம் பேர் என, மொத்தம், 10.63 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

இதில், அக்., 29ம் தேதி மட்டும், 30 ஆயிரத்து, 515 பேர் பயணம் செய்துள்ளனர்.

மெட்ரோ ரயிலில், 'மொபைல் ஆப்' வசதியில், 'க்யூ ஆர்' குறியீடு



பயன்படுத்தி, டிக்கெட் வாங்கும் வசதி, செப்., 11ம் தேதி முதல் அறிமுகம் செய்யப்பட்டு, 20 சதவீத கட்டண சலுகையுடன், 19 ஆயிரத்து, 607 பேர் பயணம் செய்துள்ளனர்.

'டிராவல் கார்டு' பயன்படுத்தி, 10 சதவீத கட்டண சலுகையில், 4.34 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.